**செய்தி வெளியீடு எண்:96** **நாள்: 27.01.2012**

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**மற்றும்**
**சுற்றுச்சூழல் துறை செய்தி வெளியீடு**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் 2011–2012 நிதி நிலை ஆண்டில் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் துறையின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பி.வி. ரமணா அவர்கள் 27/1/2012 அன்று சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலர் திரு.ச.வி.சங்கர், இஆப., அவர்கள், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் திரு.டி.எஸ். ஸ்ரீனிவாச மூர்த்தி, இவப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார். அப்போது கீழ்க்கண்ட தலைப்புகள் குறித்தும் அதன் மீது தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் சுற்றுச்சூழல் துறையை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

1. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கவும் சிறு துண்டுகளாக மாற்ற கருவிகள் வாங்கவும் பிளாஸ்டிக் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்ட ரூ.5 கோடி பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்தொகையில் ரூ.4 கோடி சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.
2. பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தரமான சாலைகள் அமைக்க ரூ.50 கோடி தமிழக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னை மாநகராட்சி, உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் ஏறத்தாழ 391 கி.மீ தூரத்திற்கு பிளாஸ்டிக் சாலைகள் நிறுவப்படும். இவற்றின் மூலம் சுற்றுச்சூழல் மாசு குறைவதோடு சாலைகளும் பராமரிப்பு தேவையற்று கூடுதல் ஆண்டுகள் பயன்படும்.
3. நகராட்சி அலுவலர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்த பயிற்சி பிப்ரவரி முதல் வாரத்தில் அளிக்கப்படும்.
4. கோயம்புத்தூர் மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து புதிய அலுவலகம் 15.02.2012க்குள் ஏற்படுத்தப்படும்.
5. கழிவு நீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பொழுது ஏற்படும் உயிரிழப்பினை தவிர்க்க தொழிற்சாலைகளுக்கு பயிற்சி பிப்ரவரி முதல் வாரத்தில் அளிக்கப்படும்.
6. புதிய தொழில் நுட்ப செயலாக்க மையம் ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

7. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தன்று தொழிற்சாலைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும்.
8. கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் துரித கண்காணிப்பு படை ஏற்படுத்த அரசு ஆணை 15.02.2012க்குள் வெளியிடப்படும்.
9. மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஏற்கனவே உள்ள சட்டப்பிரிவில் முதுநிலை சட்ட அலுவலரை நியமித்து சட்டப்பிரிவை வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
10. நொய்யல் ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் நீரின் தன்மையினை நாள் முழுதும் தொடர்ந்து கண்காணிக்க ரூ.50 இலட்சம் செலவில் கணினியுடன் இணைந்த கண்காணிப்புக் கருவிகள் அமைக்கும் பணியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோர தொழில் நுட்ப கருத்துரு இன்னும் ஒரு வாரத்தில் முடிவு செய்யப்படும்.
11. சுற்றுச்சூழல் நுண் துகள்களைக் கண்காணிக்க கருவிகள் வாங்க ஒப்பந்தப்புள்ளி இன்னும் ஒரு வார காலத்தில் கோரப்படும்.
12. தொடர் காற்றுதர கண்காணிப்பு மையத்தில் செயல் திறனை மேம்படுத்த புதிதாக விஞ்ஞானிகளை நியமிக்க விரைவில் அரசாணை வெளியிடப்படும்.
13. வாரியத்தின் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு மைய அரசின் தரச் சான்றிதழ் பெறுவதற்கு கூடுதல் பணியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.
14. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகரில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் ஏற்படுத்த அரசு ஆணை 15.02.2012க்குள் வெளியிடப்படும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கண்ட பணிகளுக்கு தனித்தனியாக அலுவலர்களை பொறுப்பாக்க அலுவலர்களுக்கு ஆணை வழங்கினார்.

**ச.வி.சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**
**சுற்றுச்சூழல் – வனத்துறை**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**